கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி
முன்னிலை : திரு.K.சுதா ராணி, M.L.,
கூடுதல் சார்பு நீதிபதி, தென்காசி
2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் திங்கள்கிழமை
**அசல் வழக்கு எண். 366/2025**

1. கருப்பசாமி
2. வேல்சாமி
3.பாலசுப்பிரமணியன் .. வாதிகள்

–எதிர்–

1. ஜார்ஜ் வர்க்கீஸ் தரகன்
2. ஆண்டி சேர்வை
3. ஆசைத்தம்பி
4. M/S பயோனியர் எக்ஸ் எனெர்ஜி
பிரைவேட் லிமிடெட்,
அதன் அதிகாரம் பெற்ற முகவரான
பா. சிவசுதன் மூலம் ..பிரதிவாதிகள்

இவ்வழக்கு இன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் ஒருதலைதரப்பாக்கப்பட்டு, இடைநிலை விண்ணப்பம் எண்.2/25, 13/26 விசாரணைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில் இவ்வழக்கை திரும்ப பெறுவதாக குறிப்பாணை தாக்கல் செய்தபடியால் இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

அ) பிராது தபசில் சொத்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்வதன் மூலம் பிராது தபசில் சொத்தினை அமைதியான முறையில் வாதிகள் அனுபவித்து வருவதை பிரதிவாதகளோ, அவரது வகையாட்களோ ,யாதொரு இடைஞ்சலும் செய்யக்கூடாதென நிரந்தர தடையாணை பிறப்பிக்க கோரியும்,

ஆ) பிராது தபசில் சொத்தினை பொறுத்து 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ள 2.12.2010 தேதிய 8261/2010 கிரைய ஆவணம் சட்டபடி செல்லக்கூடியதில்லை என உத்தரவு பிறப்பிக்க கோரியும்,

இ) பிராது தபசில் சொத்தினை பெறுத்து 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ள 02.12.2026 தேதிய 5101/2016 நம்பர் கிரைய ஆவணம் சட்டபடி செல்லக்கூடியதில்லை என உத்தரவு பிறப்பிக்க வேண்டியும்,

ஈ) பிராது தபசில் சொத்தினை பெறுத்து 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ள 30.11.2023 தேதிய 7115/2023 நம்பர் கிரைய ஆவணம் சட்டபடி செல்லக்கூடியதில்லை என உத்தரவு பிறப்பிக்க கோரியும், வழக்கின் செலவு தொகையும் செலுத்த உத்தரவிடக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| |
|---|
| “ Plaintiff counsel present, Inview of plaintiff counsel memo, above suit is dismissed as withdrawn. No cost. Memo recorded. |

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

(Sd)K. சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி

கூடுதல் சார்பு நீதிமன்றம்,
தென்காசி.
அசல் வழக்கு எண் 366/2025
நேரிய / வரைவு தீர்ப்புரை
நாள்–17.08.2026